

திருவள்ளூர் மத்திய மாவட்டம் இளைஞரணி சார்பில் ஆலோசனை கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே. சுரேஷ்குமார் தலைமையில் பூவிருந்தவல்லியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் முன்னிலையில் நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை , நகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனிப் ஏற்பாட்டில் பூவிருந்தவல்லி பகுதிச் சார்ந்த பல்வேறு மாற்றுக் கட்சி நிர்வாகிகள் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தார்கள் உடன் ஆ. கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஜி.ஆர்.திருமலை, த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, சே.பிரேம்ஆனந்த், தி.வை.இரவி, என்.இ.கேமூர்த்தி, பொன்.விஜயன், பேபிசேகர், தி.வே.முனுசாமி, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ் குமார், ஜி.துர்கா பிரசாத், மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்



முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் நலத்திட்ட உதவி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் பா.சம்பத் ஏற்பட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி இனிப்பு அறுசுவை உணவு வழங்கினார் உடன் நிர்வாகிகள் ஜி.சித்திக் அலி, நாகப்பன், பி.சாமிநாதன், ஏ.கே. திருவேங்கடம் எஸ். ஆர். செங்குட்டவன், வி. ரகு, பிச்சாண்டி, டில்லி பாபு, எஸ். ரவி, நவீன் குமார், வி.ஜி. மோகன்,கார்த்திக், அன்பு, மோனிஷா சரவணன், எம். சதீஷ், ரஜினி, பாஸ்கர், சி.டி. திருநாவுக்கரசு, சி. சுப்பிரமணி, சீனிவாசன், ரமேஷ், எஸ். மாதையா, எஸ். சௌந்தர், ஜெகன், மணி, உள்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

### பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!

# ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், அக். 11, 12 இரு நாட்கள் மாநாடு!

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை

சென்னை,ஜூன்.6-

பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது! பெரியார் பன்னாட்டமைப்பும், ஜப்பான் தோழர்களும் இணைந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், 2026, அக்டோபர் 11, 12 ஆகிய நாள்களில் இரு நாள் மாநாடு நடைபெறவிருக்கிறது. தந்தை பெரியாரின் 'மண்டைச் சுரப்பை' உலகு தொழுகிறது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திராவிடர் கழகம் - ஒரு கட்சி அல்ல; மாறாக அது ஓர் இயக்கம்.

'கட்சி' (Party) என்பதற்கும், இயக்கம் (Movement) என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

இலட்சியங்களை மய்யப்படுத்தி, அவற்றிற்காக - நிரந்தரமாக இயங்கிக் கொண்டே இருப்பது இயக்கம் (Movement).



ஆனால், கட்சி (Party) என்பது ஒரு நோக்கத்திற்காக செயல்பட்டு, அதன் நோக்கம் நிறை வேறிய போதோ அல்லது வேறு பல காரணங்களாலோ, அதன் ஆயுளும், தேவையும் முடிந்துவிடுவதன் காரணமாக, அது இயங்க முடியாத அல்லது தேவையற்ற ஒன்றாக ஆகிவிடும்.

**காந்தியாரின் அறிவுரையைப் புறக்கணித்த காங்கிரஸ்!**

எடுத்துக்காட்டாக, காங்கிரஸ் கட்சி, 'சுயராஜ்யம்', 'சுதந்திரம்' பெற்றது 1947 ஆகஸ்ட் 15 இல் என்பதையொட்டி, அண்ணல் காந்தியார் அவர்கள், "காங்கிரஸ் கட்சி கலைக்கப்படவேண்டும்; அது மேலும் நீடித்தால் அதற்குப் பலவித விரும்பத்தகாத நிலைகள்தான் ஏற்படும்" என்று எச்சரித்தார்; அந்தக் காலகட்டத்தில், காந்தியாரின் அறிவுரை - அரசியல் லாபங்கள், பதவிகளைச் சுவைக்கத் துடித்த காங்கிரஸ் கட்சி, அதற்கு மாறுபட்ட நிலையை எடுத்தது!

காங்கிரஸ் கட்சியில் கடுமையாக உழைத்து, சமூகநீதியைப் பறிக்கும் ஆரிய ஆதிக்கத்திலிருந்து அது வெளியே வர முடியாத யதார்த்த நிலையை அனுபவித்து உணர்ந்த தந்தை பெரியார், சமூக நீதி செயற்பாடுகள் (வகுப்புரிமை) பல தோற்றதின் காரணமாக, காங்கிரசை எதிர்த்துத் தனி இயக்கம் கண்டார். (இன்று மீண்டும் 'ஆரிய மாயை'யில் காங்கிரஸ் சிக்கியுள்ளது!)

உலகளாவிய இயக்கமாக மாறியிருக்கிறது!

1925 இல் அவர் "சுயமரியாதை இயக்கம்" கண்டார்! 'கட்சி' ஆரம்பிக்கவில்லை என்பது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கி, தனது சொந்தப் பணத்தைச் செலவழித்து, 'குடிஅரசு', 'பகுத்தறிவு' போன்ற ஏடுகளைத் தொடங்கினார். பல நூற்றாண்டு ஜாதி, தீண்டாமை, மூடநம்பிக்கை, பெண்ணடிமை இவற்றை ஒழித்து, வகுப்புரிமை - சமூகநீதிக் களங்களத்தில் முதல் போராளியாக நின்று, வென்று தனது 95 ஆம் ஆண்டு முடியும் வரையில் தொடர்ந்து, அவ்வியக்கத்திற்காக அடிக்கட்டுமானம், கொள்கைச் சொத்து, பிரச்சாரக் களம் முதலியவற்றை நாளும் கண்டு, எதிர்நீச்சல் அடித்து, வெற்றி என்னும் கரையை அடைந்து, அவரது வாழ்நாளுக்குப் பிறகும், அவ்வியக்கமும், அதன் ஒப்பற்ற துணிவும், தெளிவும் மிக்கக் கொள்கைகளும், உண்மையான சுயநலமற்ற தொண்டர்களும், அதனை இன்று உலகளாவிய இயக்கமாக மாற்றி, தொய்வின்றி தொடர்ந்து நடத்தி, வாகை சூடி வைர நெஞ்சினராக உலா வருகின்றனர்!

"இன்று எனது இயக்கம் ஏதோ ஒரு சிறு கூட்டத்தினரை (பார்ப்பனர் ஆதிக்கம்) எதிர்த்து நடைபெறும் இயக்கமாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில், அது உலகளாவிய மானுட உரிமை இயக்கமாகும். அதன் கொள்கைகளும், லட்சியங்களும் உலகத்திற்குத் தேவைப்படும் ஓர் இயக்கமாக மாறும்" என்று முன்னோக்கோடு கணித்துக் கூறினார்.

அது முற்றான உண்மை என்பதை நிலைநாட்டும் வண்ணம், உலகின் பற்பல நாடுகளிலும் தந்தை பெரியாரின் பகுத்தறிவு மனிதநேய இயக்கம் பரந்து பட்ட மானிடப் பரப்பையே தனது எல்லையாகக் கருதி, அலுப்பு சலிப்பின்றி வளர்ந்து வருகிறது - ஊடகங்களின் கட்டுப்பாடான இருட்டடிப்பு - திரிபுவாதங்களையும் தாண்டி!

திராவிடத்தை அழிக்க - ஆயிரமாயிரம் அலப்பறைகளைச் செய்தாலும் மூக்குடைபடும் ஆரியம்!

ஆரியம் எளிதில் எவரையும் விலைக்கு வாங்கிடவோ, திரிபுவாத த்தின் மூலம் திசை திருப்பி விடுவதோ, விபீடணர்கள் - அடிவருடிகள் தன்னை விற்றுக் கொண்டு, மானத்தை, உரிமையை மறந்து, அறிவைத் துறந்து, துரோகத்தின் உருவங்களாகியும் கூட, மூல பீடமான தமிழ்நாட்டை, அதன் தளரா கொள்கைப்பாட்டை, "திராவிடத்தை" அழிக்க - ஆயிரமாயிரம் அலப்பறைகளைச் செய்தாலும், முடியாத சூழ்நிலை - அவ்வப்போது தங்களது படையெடுப்பு முறையை பலவித வியூகங்கள், உத்திகள் மூலம் மாற்றிக் கொண்டும், மூக்குடைபட்டுக் கொண்டும்தான் உள்ளன. மாற்று 'அவதாரங்களுக்கு' ஆயத்தமாகி வரும் நிலை!

**35 ஆண்டுகளுக்கு முன்பு "பெரியார் பன்னாட்டு அமைப்பு!"**

வட அமெரிக்காவில் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு - சிகாகோ நகரில், ஒரு சில நண்பர்கள் குடும்பங்களை வைத்து, டாக்டர் சோம.இளங்கோவன், டாக்டர் சரோஜா இளங்கோவன் மற்றும் பல தோழர்களால் தொடங்கப்பட்ட "பெரியார் பன்னாட்டு அமைப்பு" என்ற மனிதநேய அமைப்பு ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, பற்பல நாடுகளில் அதன் வளர்ச்சியும், கொள்கை லட்சிய முழக்கமும், தேவையும் பரவியுள்ளன. (தண்ணீர் ஊற்றினாலும், ஊற்றாவிட்டாலும், வளர்ந்தோங்கி வரும் பனைமரம் போல, ஏழை, எளியவர்களை வாழவைக்கும் 'வாழ்வியல் வசந்த மரம்' அது).

அவ்வமைப்பினால், கடந்த ஆண்டுகளில் ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற உலகின் பல்வேறு திக்குகளில், வெற்றிகரமாக மாநாடுகள் நடத்தி, மனிதநேய சுயமரியாதைக் கதிரொளியைப் பாய்ச்சியது. அங்குள்ள மக்களை பரவசமடையச் செய்தது!

**இரு நாள் மாநாடு!**

அதன் வெற்றித் தொடர்ச்சியாக, 2026, அக்டோபர் 11, 12 ஆகிய நாள்களில், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இரு நாள் கருத்தரங்க மாநாட்டு ஏற்பாடுகளை ஜப்பான் தோழர்களும், பெரியார் பன்னாட்டமைப்பும் இணைந்து நடத்திட உற்சாகமுடன் பணியாற்றி வருகின்றனர்!

வழமைபோல், நம் நாட்டுத் தமிழினப் பேராளர்கள் (Delegates) அந்த இரு நாள் கருத்தரங்க மாநாட்டில் கலந்து கொள்ளவும், சிறு சுற்றுலாப் பயணம் முடித்து திரும்பும் வகையில் ஜப்பான் பயணத்திற்குத் திட்டமிடப்பட்டு வருகிறார்கள்!

குறிப்பிட்ட அளவே வெளிநாட்டுப் பிரதிநிதிகள் (Delegates) கலந்துகொள்ள வாய்ப்பு என்பதால், முந்திக் கொண்டு, கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள், விரைந்து அடுத்த தகவலுக்காகக் காத்திருந்து, தந்தை பெரியாரின் 'மண்டைச் சுரப்பை' உலகு தொழும், சூரியன் நாட்டில் சுயமரியாதை முழக்கம் கேட்டு, மகிழ ஆயத்தமாவீர்களாக!

பெரியார் அனைவருக்கும் உரியார், மறவாதீர்!

பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மும்பை தி.மு.க. சார்பில் தாராவி கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம. சேசுராசு தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் மும்பை தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பம்மல் வடக்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ் கண்ணா, கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பபிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, இரா.பாபுஜி, இரா.குமரேசன், ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், இ.பாலாஜி, பி.ஆண்டவன், டி.எம். ஜோசப் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, விநாயகபுரம் மனநலம் குன்றிய சமர்ப்பணம் இல்லத்தில் 30 வது வட்ட செயலாளர் டி. சுந்தரம் தலைமையில் உணவு வழங்கப்பட்டது. இதில் டாக்டர் ஜி. பார்த்தசாரதி, எம்.சரவணன், இ.ராமன், எஸ்.பி. கண்ணன், அபிப் ரஹ்மான், சி.பரமேஸ்வரி, கே. நரேந்திரன், ஏ.வி.முருகன், எஸ்.என் ராஜி, எம்.சீனிவாசன், கவி பிரியா, தயாளன், உமா மகேஸ்வரி, மீனம்மாள், சாய்ராம், வி.பாஸ்கர், பி.தேவராஜ், சக்கரபாணி, ஆர்.சி. ஜெயக்குமார், யு.கார்த்தி, டி.எஸ். உதயநிதி, விக்னேஷ் வெற்றிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி கழக அமைப்பாளர் இரா.சிவா தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

## தி.மு.க.வினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

புதுச்சேரி, ஜூன் 6-

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வில்லியனூர் தொகுதி தி.மு.க. சார்பில், தொகுதி செயலாளர் மணிகண்டன் ஏற்பாட்டில் வில்லியனூர் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தொடர்ந்து மணவெளி தொகுதி தி.மு.க. சார்பில், தொகுதி செயலாளர் ராஜாராமன் ஏற்பாட்டில் தவளக்குப்பம் நான்குமுனை சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அரியாங்குப்பம் தொகுதியில் பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், கோபால கிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன் ஆகியோர் ஏற்பாட்டில், வீராம்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மாலை அணிவித்தும், அவரது படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்.

பின்னர் திமுக அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏ.எப்.டி. திடலில் ஒன்றிணைந்து தி.மு.கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்தி ஊர்வலமாக சென்று அண்ணா சிலை அருகில் மாநில கழகம் சார்பில் அமைப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி. கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி 99 வட்டத்தில் வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமையில் பகுதி பிரதிநிதிகள் ஏ.சுகுமார் பி.சிவா ஆர்.மாது மாவட்ட துணை அமைப்பாளர் அஜித் சரவணன் ஆகியோர் ஏற்பாட்டில் சண்முகராயன் தெரு – பொன்னன் தெரு சந்திப்பு ஆர்.கே.புரம் பிரிக்களின் சாலை திடீர் நகர் சாலைமா நகர் ஆகிய இடங்களில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.ஏ. சண்முகம்**

**ஜூன் 6 (1984)**



புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் – புதுச்சேரி மாநில வீட்டு வசதி வாரியத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகத் தலைவர் கலைஞரிடத்தில் உரிமையோடு பேசக் கூடியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் மிசா சட்டத்திலும் சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**